**இலங்கை கல்வி நிர்வாக சேவை Iஆம் தரத்தின் உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமிக்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு தொடர்பாக மதிப்பெண் வழங்கும் நடைமுறை**

**1. மூப்பு நிலை** **உச்ச புள்ளிகள் 30**

(இ.க.நி.சே Iஆம் தரத்திற்கு பதவிஉயர்வு பெற்ற தினம் முதல் வருடத்திற்கு 03 மதிப்பெண்கள் வீதம்)

**2. கல்வித் தகைமை** **உச்ச புள்ளிகள் 15**

| | | |
|---|---|---|
| 2.1 | தத்துவஞானி (PhD) | - புள்ளிகள் 15 |
| 2.2 | தத்துவவாதி (M Phil) | - புள்ளிகள் 12 |
| 2.3 | பட்டப்பின் பட்டம் | - புள்ளிகள் 10 |
| **2.4** | பட்டப்பின் பட்டடிப்ளோமா | - புள்ளிகள் **07** |

(வினைத்திறன் தடை தாண்டலில் விடுவிப்பதை கருத்திற் கொள்ளும் தகைமைகளைத் தவிர வேறு கல்வித் தகைமைகளை மாத்திரம் மேற்படி புள்ளிகளை வழங்குவது குறித்து கருதப்படுவதுடன், ஒரு சான்றிதழுக்கு / மிக உயர்ந்த தகுதிக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும். மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்கள்/ நிறுவனங்களில் பயின்றுள்ள பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது கல்விச் செயலாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற கல்வித்துறைக்குரிய கல்வித் தகுதிகள் தொடர்பாக மாத்திரம் உரிய புள்ளிகள் வழங்கப்படும்)

**3. துறையில் சேவை அனுபவம்** **உச்ச புள்ளிகள் 20**

(உரிய நியமன அதிகாரிகளினால் வெளியிடப்பட்ட முறையான நியமனங்கள் / இடமாற்றக் கடிதங்கள் தொடர்பாக மாத்திரம் மதிப்பெண்கள் வழங்கப்படும்)

3.1 அதிபர் / மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர்
(இ.க.நி.சே I ஆம் தரத்தின் பதவியொன்றில் ஒரு வருட சேவைக்காலத்திற்கு 04 மதிப்பெண்கள் வீதம் அதிகபட்சம் 05 வருட சேவைக்காலத்திற்கு)

3.2 பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் / பிரதிஆணையாளர் / அதிபர்
(இ.க.நி.சே II ஆம் தர பதவியொன்றில் ஒரு வருட சேவைக்காலத்திற்கு 2.5 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 8 வருடங்களுக்காக)

3.3 அதிபர் / உதவிக் கல்விப் பணிப்பாளர் / உதவி ஆணையாளர் / பிரதி அதிபர்
(இ.க.நி.சே IIIஆம் தர பதவியொன்றில் ஒரு வருட சேவைக்காலத்திற்கு 2 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 10 வருடங்களுக்காக)

* மேற்படி பதவியொன்றில் / பதவிகளில் வேலை பார்த்தல் / கடமைகளை நிறேவேற்றுதல் / கடமை தழுவல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பதவிகளுக்கு மதிப்பெண்கள் வழங்கும் போது கருத்திற் கொள்ளப்படமாட்டாது. (அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதி 121)

**4. கணினி கல்வி தொடர்பான அறிவு** **உச்ச புள்ளிகள் 05**

(செயன்முறை பயன்பாடு தொடர்பாக கருத்திற் கொள்ளப்படும்.)

**5. ஆங்கில மொழி புலமை** **உச்ச புள்ளிகள் 05**

(தொடர்பாடல் திறனை கருத்திற் கொள்ளப்படும்)

## 6. கல்விக்குரிய ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் உச்ச புள்ளிகள் 05

6.1 **ஆராய்ச்சி** - புள்ளிகள் 2.5 × 2

(பட்டப்பின் பட்டத்திற்கு / பட்டப்பின் பட்டடிப்ளோமா குறித்து முன்வைக்கப்பட்ட ஆய்வேடுகளுக்குரிய ஆராயச்சி / ஆய்வேடுகளுக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் ஒரு **பொது ஆராய்ச்சி மன்றத்திற்கு** (Research Symposium) முன்வைக்கப்பட்ட அல்லது ஆராய்ச்சி இதழொன்றில் (Research Journal) வெளியிடப்பட்ட தனிநபர் ஆய்வறிக்கைகளுக்கு மாத்திரம் மதிப்பெண்கள் வழங்கப்படும்)

6.2 புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் - புள்ளிகள் 2.5 × 2

(பாடப் புத்தகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பரீட்சாத்த நூல்கள் தொடர்பாக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன், **கல்வி வெளியீடுகள் ஆலோசனை குழுவின் மூலமாக அனுமதி பெற்ற தனிநபர் பதிப்புரிமை** பெற்ற புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் **மாத்திரம்** மதிப்பெண்கள் வழங்கும்போது கருத்திற் கொள்ளப்படும்.)

*அதிகபட்ச ஆராய்ச்சி/ அல்லது இரண்டு நூல்களுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்

6.3 கல்வி வெளியீடுகளுக்காக வழங்கப்படும் அறிக்கைகள் மற்றும் கல்வித் தொகுப்பொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 01 தொடர்பில் புள்ளிகள் வழங்கப்படும்.

## 7. சமர்ப்பித்தல் உச்ச புள்ளிகள் 10

சேவை ஸ்தலத்தில், (பாடசாலை / கல்விஅமைச்சு / கல்வித் திணைக்களம் / வலய அலுவலகம் / கோட்டக் காரியாலாம்) பணிகளை நிறைவேற்றும்போது, கல்வி முறைமையின் பண்புத்தரம் மற்றும் விளைத்திறனை அதிகரிப்பதற்காக அடிப்படையான சம்பவம் ஒன்றை / சந்தர்ப்பம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு அதை பகுப்பாய்வு செய்து மேற்கொள்ளப்படும் விளக்கப்படுத்தலுக்காக பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

- **i. பிரவேசம் மற்றும் அறிமுகம் - புள்ளிகள் 2**
- **ii. உள்ளடக்கம் - புள்ளிகள் 2**
- **iii. நேர முகாமைத்துவம் - புள்ளிகள் 2**
- **iv. சமர்ப்பிக்கப்படும் விதம் - புள்ளிகள் 2**
- **v. முடிவு மற்றும் தீர்வு - புள்ளிகள் 2**

அதற்காக கணினி மூலமாக (PowerPoint அல்லது வேறு பொருத்தமான ஊடகங்கள் மூலமாக 05 வினாடிகள் வாய் மூல விளக்கக்காட்சியினை முன்வைப்பதுடன் அதற்குரிய வன்பிரதியினை நேர்முகத்தேர்வுக் குழுவிற்கு வழங்கப்படல் வேண்டும்.)

## 8. நேர்முகத் தேர்வின் போது காட்டப்படும் ஒட்டு மொத்ததிறன் உச்ச புள்ளிகள் 10

**100**